## IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 63/2019 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Kuppaiyandi | CASTE | : | |
| S/O. | Ramasamy | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** : **10-03-2022**

நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தை அளந்து கொடுக்க வேண்டும் என பரிகாரம் கேட்டுள்ளேன். அந்த இடத்தில் பிரதிவாதி கருப்பசாமி என்பவர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி தற்சமயம் குடியிருந்து வரும் வீட்டில் 30 வருடங்களுக்கு முன்பாகவே அவரது தகப்பனார் குடிசை வீடு கட்டி குடும்பத்துடன் வசித்து வந்தார் என்றால் இல்லை. அது வேறு இடம் ஆகும். அந்த இடம் பிரச்சனைக்குரிய இடத்திற்கு கிழக்கு பக்கம் உள்ளது. அதன் சர்வே எண்.80/6ஏ2 ஆகும். அவ்வாறு பிரதிவாதி சர்வே எண்.80/6ஏ2 சொத்தில் தான் வசித்து வந்தார் என்ற விபரத்தை நான் தாக்கல் செய்த பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் தற்சமயம் எந்த சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.80/6ஏ2 சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.80/6ஏல் மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்து கட்டுப்பட்டுள்ளது என்றால் 21 செண்ட் விஸ்தீரணம் உள்ள சொத்து உள்ளது. அதில் நான் 9 செண்டிற்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.80/6ஏ2ல் பிரதிவாதிக்கும் பங்கு உண்டு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.80/6ஏல் கட்டுப்பட்ட சொத்தை எந்த வருடம் யார் கிரையம் வாங்கினார் என்றால் எனது தகப்பனாரை பெற்ற தாத்தா குப்பையாண்டி என்பவர் 1935ம் வருடம் கிரையம் பெற்றுள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் எனது தாத்தா கிரையம் பெற்ற ஆவணம் என்றால்

சரிதான். எனது தாத்தா குப்பையாண்டி என்பவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் ராமசாமி என்ற ஒரு ஆண் வாரிசும் மயில் என்ற ஒரு பெண் வாரிசும் மட்டும் உள்ளார்கள். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சர்வே எண் என்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.80/6ஏ என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கிரைய சொத்து விபர அளவில் திருத்தங்கள் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் சர்வே எண் 6ஏ என இடைச்சொருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றும், சொத்து அளவில் 21 செண்ட் என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. வா.சா,ஆ.1 ஆவணத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் பட்டா தொடர்பாக இடைச்சொருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு இடைச்சொருகலாக சேர்க்கப்பட்ட விபரங்கள் வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. எனது தாத்தா குப்பையாண்டி என்பவரின் வாரிசுகள் பற்றிய விபரத்தை நான் தாக்கல் செய்த பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தா குப்பையாண்டி என்பவரது பெண் வாரிசு மயில் என்பவர் இறந்துவிட்டார் என்ற விபரத்தையும் பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது ஊரில் எனது தாத்தா பெயரான குப்பையாண்டி என்ற பெயரை வேறு சில நபர்களுக்கும் பெயராக வைத்துள்ளார்கள் என்றால் இல்லை. தாவா சொத்தில் இருந்து அமரடாக்கி கிராமம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் தான் அமரடாக்கி கிராமம் எல்கை உள்ளது. தாவா சொத்திற்கு நான்குமால் விபரம் தெரியுமா என்றால் தெரியும். வடக்கு பக்கம் அலங்காநல்லூர் - தனிச்சியம் செல்லக்கூடிய மெயின்ரோடும், மேற்கு பக்கம் மணி என்பவரின் காலியிடமும், தெற்கு பக்கம் பாப்பாத்தி என்பவரின் காலியிடமும், கிழக்கு பக்கம் எங்களது பங்காளிக்கு பாத்தியமான மீதமுள்ள இடமும் உள்ளது. நான் 3 லக்க சொத்துக்கள் குறித்து வழக்கு தாக்கல் செய்ததில் முதல் லக்க சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 2 அடி விஸ்தீரணம் ஆகும். மேற்படி 2 அடி சொத்தின் நான்குமால் என்ன என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு மறந்துபோய்விட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தை படித்து பார்த்து என்னால் சொல்ல இயலுமா என்றால் இயலாது. வா.சா,ஆ,1 ஆவணத்தில் கிரைய சொத்து விபரத்தின் தெற்கு நான்குமாலாக தெற்கே முத்துக்குமாரமணியம் காலியிடம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால்

நான் தாக்கல் செய்த பிராது சொத்து விபரத்தில் தெற்கு பக்கம் அமரடாக்கி கிராமம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. வா.சா,ஆ.1 ஆவணத்தில் கிரைய சொத்து விபர நான்குமாலில் வடக்கு பக்கம் கருப்பண மணியம் இடம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. ஆனால் நான் தாக்கல் செய்த பிராது சொத்து விபரத்தின் வடக்கே குப்பையாண்டி மணியக்காரர் வீடு இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. வா.சா,ஆ.1 கிரைய ஆவண சொத்து விபரத்தில் கிழக்கு பக்கம் வீதி இருப்பதாக குறிப்பிட்டுள்ளது என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. பிராது 1வது லக்க சொத்திற்கும் வா.சா.ஆ,1 கிரைய ஆவண சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், அது வேறு லக்க சொத்து என்றால் சரியல்ல. பிராது 2வது லக்க சொத்திற்கு நான்குமால் என்னவென்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. ராஜாமணியம்மாள் என்பவர் எனது தாத்தா குப்பையாண்டி என்பவருக்கு எழுதிகொடுத்த கிரைய பத்திரமான வா.சா.ஆ.1 பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றிய தெரியாது. சாமிமணியம் என்பவர் எனது தாத்தா குப்பையாண்டி என்பவருக்கு எழுதிகொடுத்த வா.சா.ஆ.2 பற்றிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அது எனது தாத்தா காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பத்திரம் ஆகும். நான் தாவா பிராதில் மொத்தம் எத்தனை லக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 பத்திரத்தில் உள்ள சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா,ஆ.1 மற்றும் வா.சா.ஆ,2 கிரைய ஆவணங்களில் உள்ள சொத்து விபரங்களுக்கு ஒரே சர்வே எண் மற்றும் ஒரே நான்குமால் தான் உள்ளது என்றால் சரிதான். எனக்கு சொந்தமான வேறு சொத்துக்கள் சின்ன இலந்தைகுளம் என்ற கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வா.சாஆ,1 மற்றும் 2 வரையிலான ஆவணங்களுக்கும் தாவா சொத்தில் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், மேற்படி ஆவணங்கள் சின்ன இலந்தைகுளம் ஊரில் கட்டுப்பட்ட வேறு சொத்துக்களுக்குரியது என்றால் சரியல்ல. அதேபோல் பிராது 1 மற்றும் 2வது லக்க சொத்துக்கள் ஒரே சொத்து தான் என்றும், தவறுதலாக 2 லக்க சொத்துக்களாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராது சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்ட 3 லக்க சொத்துக்களும் தனித்தனியாக உள்ளதா அல்லது ஒரே சொத்தாக உள்ளதா என்றால் ஒரே சொத்தாக தான் உள்ளது. மேற்படி 3 லக்க சொத்துக்களுக்கும் சேர்த்து உள்ள ஒரே நான்குமால் என்னவென்றால் வடக்கே ரோடும், தெற்கே பாப்பாத்தியம்மாள் என்பவரின் இடமும்,

மேற்கே மணி என்பவரின் இடமும், கிழக்கே பிரதிவாதி கருப்பசாமி ஆக்கிரமிப்பு செய்த இடமும் உள்ளது. மொத்த சொத்திற்கும் நான் குறிப்பிட்ட இடம் தான் நான்குமால் என்றால் சரிதான். தற்போதைய நான்குமால் அதுதான். ராமசாமி மணியன் என்பவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 ஆண் மற்றும் 2 பெண் வாரிசுகள் உள்ளார்கள். அவர்கள் முருகன், இந்திராணி, நளாயினி ஆவார்கள். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ3 ஆவணம் எனது தந்தை ராமசாமி மணியன் என்பவருக்கு ராமு மணியம் மற்றும் சக்தி வேல் ஆகியோர்கள் 4 செண்ட் இடத்தை கிரையம் செய்து கொடுத்த பத்திரம் ஆகும். மேற்படி பத்திரத்திலும் இடைச்சொருகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தில் அவ்வாறு இடைச்சொருகள் சேர்க்கப்பட்டதாக பத்திரத்தின் அடிப்பகுதியில் எவ்வித விபரங்களும் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ,3ல் உள்ள கிரைய சொத்தின் நான்குமால் விபரம் என்னவென்றால் அதுவும் ஒரே சொத்திற்குரிய நான்குமால் தான். எனது தந்தை கிரையம் வாங்கிய கிரைய பத்திர சொத்து விபரத்தில் மேற்கே படைப்பையும் வடக்கே ரோடும் உள்ளதாக குறிப்படப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ3 ஆவணத்திற்கும் தாவா பிராது சொத்து விபரத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கின் சொத்து விபரத்தை முழுமையாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ,4 ஆவணம் நில உடைமை மேம்பாட்டு திட்ட காலத்தில் வழங்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். எனது தாத்தா குப்பையாண்டியின் வாரிசுகளோ அல்லது எனது தந்தை ராமசாமி மணியம் என்பவரது வாரிசுகளோ அவர்களுக்கு பாத்தியமான சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை எதுவும் செய்துகொண்டோமா என்றால் இல்லை. வா.சா.ஆ,4ல் குறிப்பிடப்பட்ட 6 பட்டாதாரர்களுக்கும் அதில் கண்ட சொத்தில் பாத்தியம் உள்ளது என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. வா.சாஆ,1 முதல் வா.சா.ஆ,3 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்திற்கு தனிப்பட்டா வழங்கக்கோரி மனு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்களது ஊரில் ராமசாமி மணியம் என்ற பெயரில் வேறு நபர்கள் உள்ளார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 தாவா சொத்திற்குரிய புலப்படம் ஆகும் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியும். வா.சாஆ,6 புலப்பட நகலின் அடிப்படையில் பிராது சொத்து விபரத்தில் நான்குமால் விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது மாறுபடக்கூடியது ஆகும். நான் இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பே பிரதிவாதி கட்டிடம்

கட்டிக்கொண்டிருந்தார் என்றால் சரிதான். அது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். எத்தனை அடி அளவில் பிரதிவாதி எனது இடத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் 30 அடி நீளம் 16 அடி அகலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். மேற்படி 30 அடி நீளம் 16 அடி அகலத்தில் கட்டுப்பட்ட சொத்தில் தான் பிரதிவாதி ஏற்கனவே குடியிருந்து வந்தார் என்றால் இல்லை. மேற்படி 30 அடி நீளம் 16 அடி அகலத்தில் கட்டுப்பட்ட சொத்தை தவிர பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் மேற்படி இடத்தை சுற்றிய நான்குமாலில் கட்டுப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி இடம் தவிர அருகில் உள்ள இடம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தானது எனக்கு மட்டும் தனித்து பாத்தியமானது இல்லை என்றும், பிரதிவாதிக்கும் கூட்டுரிமையாக பாத்தியப்பட்டது என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. தாவா இடத்தை நீதிமன்ற ஆணையாளர் சர்வேயர் மூலம் அளவீடு செய்தார் என்றால் சரிதான். பொதுவாக கிராம எல்கை கல் மாறாது என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் அமரடாக்கி கிராமத்திற்கு கட்டுப்பட்டது என்றும், தாவா சொத்திற்கும் மேற்படி ஆவணங்களுக்கும் சம்பந்தமில்லை எனறால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் 2வது ஆவணத்திற்கும், வா.சா,ஆ.3வது ஆவணத்திற்கும் இடையே வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ,1 முதல் வா.சாஆ,3 வரையிலான ஆவணங்கள் பற்றிய விபரங்கள் எனக்கு தொயாது என்றும், வழக்கறிஞரிடம் தவறான தகவலை குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், மேற்படி வா.சா.ஆ1 முதல் 3 வரையிலான ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரத்திற்கும் தாவா சொத்து விபரத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்கு தேவையான தரப்பினர்களை சேர்க்காமல் மொத்த சொத்தையும் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சர்வே எண்.80/6ஏ2ல் கட்டுப்பட்ட சொத்தில் பிரதிவாதி 35 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகிறார் என்றும், மேற்படி விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிராது சொத்து விபரத்தில் சர்வே எண்.80/6ஏ2க்கு கிழக்கு பக்கம் பிரதிவாதி இடம் இருப்பதாக குறிப்பிட்டு விட்டு தற்சமயம் பிரதிவாதிக்கு எந்த இடமும் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ,1 முதல் 3 வரையிலான ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அமரடாக்கி

கிராம எல்கை பற்றிய விபரத்தை நான் தாக்கல் செய்த பிராது சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்றும், அதேபோல் நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையிலும் குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் தாவா சொத்தானது அமரடாக்கி கிராமத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல அது சின்ன இலந்தைகுளம் கிராமத்திற்கு கட்டுப்பட்டது ஆகும். நான் பிராது சொத்து விபரத்தில் 1 முதல் 3 லக்க சொத்துக்களுக்கு நான்குமாலாக குறிப்பிட்டுள்ள சொத்து விபரத்திற்கும் தற்போதைய பிராது சொத்து விபரமாக குறிப்பிடப்பட்ட சொத்தின் நான்குமால் விபரத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்குரிய பட்டா எண் என்னவென்றால் 482 ஆகும். தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் பட்டா எண்.482ல் கட்டுப்பட்ட சொத்து உள்ளது என்றால் அது தற்சமயம் மொத்த விஸ்தீரணமான 21 செண்டில் 6 செண்ட் இடம் மாறிவிட்டது. அவ்வாறு மாறுதல் ஏற்பட்டது வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ஏற்பட்டதா அல்லது வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு ஏற்பட்டதா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மாறிவிட்டது. அதன்படி பட்டா எண்.482ல் 6 செண்ட் இடம் குறைந்தது போக மீதமுள்ள இடம் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து பங்காளிகளுக்கு பாத்தியப்பட்ட கூட்டுரிமை சொத்து என பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதன்படி உட்பிரிவு செய்தால் மட்டுமே எனக்கு பாத்தியமான 9 செண்ட் இடத்தை நிர்ணயம் செய்ய முடியும் என்றால் சரியல்ல. எனது தந்தை கால கட்டத்தில் இருந்தே தாவா சொத்தில் கடை வைத்து அனுபவம் செய்து வருகிறோம். அவ்வாறு கடை வைத்திருந்த விபரத்தை பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அது ஆரம்பத்தில் இருந்தது. எனது அனுபவத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரங்கள், வில்லங்க சான்றிதழ், கணினி சிட்டா ஆகியவை கொடுத்துள்ளேன். நான் குறிப்பிடும் ஆவணத்திற்கும் அனுபவ உரிமைக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்த வரைபடம் பற்றிய விபரம் தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். அதன்படி தாவா சொததில் மலைச்சாமி மகன் கண்ணன், சாமி மணியன் மகன் மணி, ராமசாமி மகன் குப்பையாண்டி, குப்பையாண்டி மகன் பிரதிவாதி கருப்பசாமி ஆகியோர்கள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி கருப்பசாமி கடந்த 35 வருடங்களுக்கு மேலாக தாவா சொத்தில் குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார் என்றும், மேற்படி விபரங்கள் தெரிந்தே எங்களுக்குள் இருந்த கருத்து வேறுபாடு

காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. யுடிஆர் திட்ட காலத்திற்கு முன்பு தாவா சொத்து மீனாட்சியம்மாள் பெயரில் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மீனாட்சி அம்மாள் என்பவரிடம் இருந்து பிரதிவாதி வாய்க்கரலாக கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு அதிகப்படியான செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் விளம்புகை பரிகாரம் கோருவதற்கான தரப்பினர்களை சேர்க்காமலும், அதற்கு தேவையான நபர்களை சேர்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவண சொத்து விபரத்திற்கும் பிராது செர்தது விபரத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(ஒம்.) திரு. D. ராம்கணேஷ், எம்.ஏ.,எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி